மொழிபெயர்ப்பு

MA/ICTU/3-ANC-1

10.10.2019

சகல மாவட்ட செயலாளர்களுக்கும்
கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கும்
விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கும்
சகல மாகாணங்களினதும் விவசாயப் பணிப்பாளர்களுக்கும்
சகல மாவட்டங்களினதும் விவசாயப் பணிப்பாளர்களுக்கும்

**<u>மத்தியமயப்படுத்தப்பட்ட விவசாய கேந்திர நிலையத்தைத் தாபித்தல்</u>**

68 நாடுகளின் அரசாங்கங்களுடன் இலங்கை செய்துகொண்டுள்ள திறந்த அரச பங்காளித்துவ ஒப்பந்தத்தின் (OGP) பிரகாரம், அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள 2019.03.01 முதல் 2021.08.31 ஆம் திகதி வரையான டிஜிட்டல் பொருளாதார திறமுறைத்திட்டத்தின் கீழ் மத்தியமயப்படுத்தப்பட்ட விவசாய கேந்திர நிலையத்தை தாபிப்பது இலங்கைக்கான கட்டாய கடமையாகும்.

அதற்கிணங்க, சரியான தகவல்களை விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் நாட்டின் விவசாயப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவது இந்த அமைச்சின் பொறுப்பாகும். இந்த முன்னெடுப்பின் ஆரம்ப கட்டமாக, விவசாயிகளின் காணி உரித்துடமை, அவர்களின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியன பற்றிய தரவுகளை அமைச்சு சேகரித்து பேணவும் மற்றும் தரவுகளின் பகுப்பாய்வுக்கும் விளக்கத்திற்கும் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளவும் வேண்டியுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முதல் கட்டமாக, நெற் காணிகள் தொடர்பான தரவுகளை சேகரிக்கும் பணி கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட அதே நேரம் காய்கறி மற்றும் பழ வகைகள் தொடர்பான தரவுகளை சேகரிக்கும் பணி பதுளை மாவட்டத்தில் அரம்பிக்கப்பட்டது.

விவசாயிகளுக்கும், அரச ஊழியர்களுக்கும், உள்ளீடுகளை விநியோகிக்கும் தரப்புகளுக்கும், விவசாய மைய இயக்குநர் தரப்புகளுக்கும் மற்றும் சந்தைப் படுத்தும் நிறுவனங்களுக்கும் நன்மைகளை பெற்றுக் கொடுப்பது இந்தக் கருத் திட்டத்தின் நோக்கமாகும். மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு மாவட்டங்களினதும் விவசாயிகளும் மற்றும் பண்ணை நிலங்களும் பற்றிய தரவுகள் சேகரித்தல் பணி தற்பொழுது விவசாய மற்றும் கமநலக் காப்புறுதி சபையினது கூட்டு ஒத்துழைப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த செயல் நவடடிக்கையில் கிராம உத்தியோகத்தர்களினதும் மற்றும் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களினதும் (ARPAs) உதவி நேரடியாக பெற்றுக் கொள்ளப்படுகின்றது. இது தவிர, மாவட்ட செயலாளர்களினதும், பிரதேச செயலாளர்களினதும், மாவட்ட விவசாயப் பணிப்பாளர்களினதும், கமநல அபிவிருத்தி மாவட்ட

பிரதி/உதவி ஆணையாளர்களினதும் மற்றும் விவசாய அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தர்களினதும் அதே நேரம் அபிவிருத்தி உத்தியோகத்தர்களினதும் கூட்டுப் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதும் ஒரு மாவட்டத்தினுள் குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் பயனுள்ள மற்றும் வெற்றிகரமான செயற்படுத்துகையை உறுதிசெய்வதற்கு மிகவும் இன்றியமையாததாகும். ஆகையால் அவர்களின் பங்களிப்பு பின்வரும் விதத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.

**<u>மாவட்ட செயலாளர்களின் பங்களிப்பு</u>**

1. தேவையான செயற்பாடுகள் மற்றும் வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் ஆகியன தொடர்பில் அமைச்சின் உத்தியோகத்தர்களினதும் அதே போல் கருத் திட்டத்தின் உத்தியோகத்தர்களினதும் ஒருங்கிணைப்பின் நிமித்தம் அறிவுரைகளை வெளியிடுதல்.
2. தேவையான தரவுகளையும் தகவல்களையும் வழங்கும் நிமித்தம் பிரதேச செயலாளர்களுக்கு அறிவுரைகளை வழங்குதல்.

**<u>பிரதேச செயலாளர்களின் பங்களிப்பு</u>**

1. உரிய பிரிவினுள் தரவுகளையும் தகவல்களையும் வழங்கும் நிமித்தம் உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரைகளை வழங்குதல்.
2. கருத் திட்டத்திற்கு தேவையான தரவுகளையும் தகவல்களையும் வழங்கும் நிமித்தம் கமநல அபிவிருத்தி பிரதி/உதவி மாவட்ட ஆணையாளர்களுக்கு அறிவுரைகளை வழங்குதல்.

**<u>மாவட்ட விவசாயப் பணிப்பாளர்களின் பங்களிப்பு</u>**

1. தரவுகளை சேகரிக்கும் நடபடிக்கையில் உதவுதல்.

**<u>கமநல அபிவிருத்தி பிரதி/உதவி ஆணையாளர்களின் பங்களிப்பு</u>**

1. தேவையான செயற்பாடுகள் மற்றும் வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் ஆகியன தொடர்பில் அமைச்சின் உத்தியோகத்தர்களுடனும் மற்றும் கருத் திட்டத்தின் உத்தியோகத்தர்களுடனும் ஒருங்கிணைந்து தொழிற்படுதல்.
2. மாவட்டத்தினுள் தேவையான தரவுகளையும் தகவல்களையும் வழங்குதல்.
3. கருத் திட்டத்திற்கு தேவையான தரவுகளையும் தகவல்களையும் வழங்கும் நிமித்தம் விவசாய ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர்களுக்கு கற்பித்தல் / போதித்தல்.
4. கருத் திட்டத்தை திட்டமிடப்பட்டவாறு நிறைவு செய்வதற்கு தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளல்.
5. ஒவ்வொரு பயிர் செய்கை போகத்திலும் தரவுத் தளத்தை இற்றைப்படுத்தும் படி உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்துதல்.

**<u>கமநல அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தர்களின் பங்களிப்பு</u>**

1. முறைமையினுள் தரவுகளை உள்ளீர்ப்பதை மேற்பார்வை செய்தல்.
2. விவசாய ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர்களையும் கருத் திட்டத்தின் உத்தியோகத்தர்களையும் ஒருங்கிணைத்தல்.
3. ஒவ்வொரு பயிர் செய்கை போகத்திலும் தரவுத் தளத்தை இற்றைப்படுத்தும் படி உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்துதல்.

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பங்களிப்பு</u>**

1. தரவுகளை சேகரிக்கும் நடபடிக்கையில் உதவுதல்.

**<u>விவசாயப் போதகர்களின் பங்களிப்பு</u>**

1. தரவுகளை சேகரிக்கும் நடபடிக்கையில் உதவுதல்.

**<u>கிராம உத்தியோகத்தர்களின் பங்களிப்பு</u>**

1. தேசிய அடையாள அட்டைகள் இல்லாமல் பெற்றுக் கொள்ள உதவுதல்.
2. விவசாயிகள் பற்றிய தரவுகளை கிடைக்கச்செய்தல்.
3. மேட்டுநில விவசாயப் பதிவுகளை கணனியில் உள்ளீர்க்கும் நடபடிக்கையில் கருத் திட்டத்தின் உத்தியோகத்தர்களுக்கு உதவுதல்.
4. தரவுகளை சேகரிக்கும் நடபடிக்கையில் உதவுதல்.

**<u>விவசாய ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர்களின் பங்களிப்பு</u>**

1. விவசாயிகள் பற்றிய தகவல்களை வழங்குதல்.
2. விவசாய நிலங்கள் பற்றிய தகவல்களை வழங்குதல்.
3. விவசாய நிலத்தை வரைபடமாக்குவதற்கு நிலத்தை இனங்காணுவதில் உதவுதல் மற்றும் தேவையான ஏனைய தகவல்களை வழங்குதல்.
4. ஒவ்வொரு பயிர் செய்கை போகத்திலும் தரவு தளத்தை இற்றைப்படுத்துதல்.

மேற்குறித்த கருத் திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு நீங்கள் நல்கும் ஒத்துழைப்பு பெரிதும் மதிக்கப்படும்.

ஒப்பம்: கே.டீ.எஸ். ருவன்சந்திர
செயலாளர்
கமத்தொழில், கிராமிய விவகாரங்கள், நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு

**பிரதிகள்:**
சகல மாகாண செயலாளர்களுக்கும் - தகவலுக்காக